# ANANTHA ACADEMY BATTICALOA.

## BIOLOGY

UNIT – 02- **Chemical and cellular basis of life**

## QUICK REVISION & PRACTICE MODEL QUESTIONS- IV

**மாதிரிப் பல்தேர்வு வினாக்கள்** **நேரம் - 30 நிமிடங்கள்**

1.பெனடிக்கின் சோதனைப் பொருளுடன் சேர்த்துக் கொதிக்கவைக்கும்போது செங்கற்சிவப்பு நிற வீழ்படிவைத் தராதது எது?

1.Glucose 2.Fructose 3.Maltose 4.Sucrose 5.Lactose

2.செலுலோசு தொடர்பாகத் தவறான கூற்று எது?

1.இது குழற்போலிக் கலச்சுவரின் அத்தியாவசியமான கூறுகளுள் ஒன்றாகும்

2.இது குளுக்கோசின் பல்பகுதியமாகும்

3.இது பக்ரீரியாக் கலச்சுவரில் காணப்படுவதில்லை


4.சில பங்கசுக்களில் செலுலோசை நீர்ப்பகுப்பு செய்யக்கூடிய நொதியங்கள் காணப்படுகின்றது

5.செலுலோசினாலாக்கப்பட்ட கலச்சுவர்கள் ஒரு பங்கீடு புகவிடக்கூடியன.

3.பின்வரும் கலப்புன்னங்கங்களுள் எது அல்லது எவை ATP தொகுப்பை நடாத்தும் இடம் அல்லது இடங்கள்

A.இறைபோசோம் B.கரு C.பச்சையுருவம் D.இழைமணி E.புன்குர

4.தரப்பட்ட சூத்திரத்தால் குறிக்கப்படும் இரசாயனச்சேர்வை பின்வருவனவற்றுள் எதன் நீர்ப்பகுப்பின்போது உண்டாக்கப்படும்?



1.காபோவைதரேட் 2.இலிப்பிட் 3.புரதம் 4.DNA 5.ATP

5.கொழுப்புக்கள் எண்ணையினங்கள் தொடர்பில் சரியானது எது?

1.மூலக்கூறு ஒன்றிலே ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கைக்கு ஒட்சிசன் அணுக்கள் கொள்ளும் விகிதம் 2 : 1 ஆகும்

2.அவை தாவரக் கலச்சுவரின் ஒரு பொதுவான கூறாக உள்ளன

3.இவை இன்வட்டேஸ் மூலம் எளிதில் நீர்ப்பகுப்பு செய்யப்படும்

4.அவை தாவரக்கலங்கள் பலவற்றில் வித்தகவிழையத்திற் பொதுவாகக் காணப்படும் சேமிப்புப் பதார்த்தங்களாகும்

5.அவை சுவாசக்கீழ்ப்படை ஒன்றாகப் பயன்படுத்தப்படும்போது வெளியேற்றப்படும் $CO_2$ இன் கனவளவானது உறிஞ்சப்படும் $O_2$ இன் கனவளவிலும் கூடுதலாக அமையும்

6.Eukaryota கலமொன்றிலே தொகுக்கப்பட்ட புரதத்தின் தன்மை பற்றிய தகவல் பின்வருவனவற்றில் எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

1.இறைபோசோம் 2.அமினோஅமிலம் 3.நிறமூர்த்தம் 4.புன்கரு 5.மையப்பாத்து

7.DNA மூலக்கூறின் முதுகெலும்பாக விளங்குவது

1.பியூரின்கள் 2.பிரிமிடின்கள் 3.டியொக்சிறைபோஸ் 4.வெல்லப் பொஸ்பேற் கூட்டம் 5.நியூக்கிளியோரைட்

8.கீழ்க்காண்பவற்றில் விலங்கினக்கலங்களில் மிக ஏராளமாகக் காணப்படுவது எது?

MR.SUGU

1.காபோவைதரேட் 2.இலிப்பிட் 3.கனிப்பொருள் 4.புரதங்கள் 5.நீர்

9.கீழ்க்காண்பவற்றில் ஒன்றைத் தவிர மற்றையவை அனைத்தும் புரதங்களாகும்.புரதமல்லாதவை

1.கிளைக்கோஜன் 2.கெரற்றீன் 3.கைற்றின் 4.கொலாஜின் 5.இலிப்பேஸ்

10.ஒரு மாப்பொருள் மூலக்கூறில் H : O இனது விகிதம் பின்வருவனவற்றுள் எது?

1. 1 : 1 2. 2 : 1 3. 1 : 2 4.மாறுந்தன்மையுள்ளது 5. 1 : 3

11.செலுலோசு பின்வரும் பதார்த்தங்களுள் எதன் பல்பகுதியமாகும்

1.றைபோசு 2.பிறக்ரோசு 3.குளுக்கோசு 4.சுக்குரோசு 5.இலக்ரோசு

12.தாழ்த்தும் வெல்லங்களைச் சோதிப்பதங்குப் பயன்படுத்தப்படும் பீலிங்கின் கரைசலானது?

1.நீலநிறம் 2.செங்கட்டிச்சிவப்பு நிறம் 3.பச்சைநிறம் 4.மஞ்சள்நிறம் 5.நிறமற்றது

13.

| | கரைசல் X | கரைசல் Y | கரைசல் Z |
|---|---|---|---|
| பீலிங்கின் சோதனை | செங்கட்டிச் சிவப்பு வீழ்படிவு | வீழ்படிவு தோன்றவில்லை | செங்கட்டிச் சிவப்பு வீழ்படிவு |
| அயடீன் சோதனை | கடும் நீலநிறம் | கபில நிறம் | வெளிறிய கபிலநிறம் |
| பயூரட்டின் சோதனை | மிக இலேசான நிலநிறம் | ஊதாநிறம் | ஊதாநிறம் |
| சூடான் III சோதனை செய்யப்பட்டு நுணுக்குக் காட்டியூடாக அவதானிக்கப்பட்டது | சீரான இலேசான இளஞ்சிவப்பு நிறம் | கடும் இளஞ்சிவப்புச் சிற்றுருண்டைகள் | கடும் இளஞ்சிவப்புச் சிற்றுருண்டைகள் |

மேற்காட்டப்பட்ட பரிசோதனையின் படி கரைசல் X கொண்டிருப்பது

1.குளுக்கோசு 2.குளுக்கோசும் மாப்பொருளும் 3.தாழ்த்தும் வெல்லமும் மாப்பொருளும்

4.சுக்குரோசும் புரதமும் 5.தாழ்த்தும் வெல்லமும் மாப்பொருளும் எண்ணையும்

14.கரைசல் Y கொண்டிருப்பது

1.மாப்பொருளும் புரதமும் 2.மாப்பொருளும் எண்ணையும் 3.புரதமும் எண்ணையும்

4.தாழ்த்தும் வெல்லமும் புரதமும் 5.சுக்குரோசும் எண்ணையும்

15.கரைசல் Z கொண்டிருப்பது

1.தாழ்த்தும் வெல்லமும் மாப்பொருளும் புரதமும் 2.மாப்பொருளும் புரதமும் எண்ணையும்

3.தாழ்த்தும் வெல்லமும் புரதமும் எண்ணையும் 4.தாழ்த்தும் வெல்லமும் மாப்பொருளும் எண்ணையும்

5.தாழ்த்தும் வெல்லமும் மாப்பொருளும் புரதமும் எண்ணையும்

16.கியூற்றின்,மெழுகு,சுபரின் என்பன தாவரங்களில் காணப்படக்கூடிய 3 பதார்த்தங்களாகும்.இப்பதார்த்தங்கள் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1.மூன்று பதார்த்தங்களும் இலைகளின் மேற்றோலில் காணப்படுகின்றன

2.மூன்று பதார்த்தங்களும் ஒப்பீட்டளவில் நீரை உட்புகவிடாத தன்மை உடையன

3.மூன்று பதார்த்தங்களும் வேர்களின் அகத்தோலில் காணப்படுகின்றது

4.மூன்று பதார்த்தங்களும் அல்காக்களில் காணப்படுகின்றது



MR.SUCI

5.மூன்று பதார்த்தங்களும் அனலீன் சல்பேற்றுடன் மஞ்சள் அல்லது செம்மஞ்சள் நிறமாகச் சாயமேற்றப்படுகின்றது

**17.**பின்வருவனவற்றுள் காபோவைதறேட் அல்லது காபோவைதறேட்டின் ஒரு பெறுதி அல்லாதது

**1.**பெக்ரின் 2.கைற்றின் 3.கியூட்டின் 4.ஏகார் 5.அரைச்செலுலோஸ்

**18.**தாவர இராச்சியத்தில் கைற்றின் ஒரு கூறாகக் காணப்படுவது

**1.**வல்லுருக்கலவிழையக் கலங்களில் 2.தக்கைக்கலங்களில் 3.பக்ரீரியாவின் கலச்சுவரில்

**3.**சயனோபக்ரீரியாவின் கலச்சுவரில் 5.பெரும்பாலான பங்கசுக்களின் கலச்சுவரில்

**19.**பின்வரும் இயல்புகளுள் DNA,RNA ஆகிய இரண்டுக்கும் பொதுவான இயல்பு அல்லாதது?

**1.**அவை நியூக்கிளியோரைட்டுக்களைக் கொண்டுள்ளன

**2.**அவை பிறப்புரிமையியலுக்குரிய செய்தியைச் சேமித்து வைத்துள்ளன

**3.**அவை இரட்டை விரிபரப்புச் சுருளாகக் காணப்படுகின்றன

**4.**அவை பென்ரோஸ் வெல்லங்களைக் கொண்டுள்ளன

5.அவை சைற்ரோசினைக் கொண்டுள்ளன.

20.Bacteria நிறமூர்த்தம் கொண்டிருப்பது

1.RNA இனை மாத்திரம் 2.DNA இனை மாத்திரம் 3.RNA இனையும் DNA இனையும் மாத்திரம்

4.DNA யையும் புரதத்தையும் மட்டும் 5.RNA யும் DNA யும் புரதமும்

21.சரியான கூற்று அல்லது கூற்றுக்களைத் தெரிவு செய்க.

A.இனுலின் ஒரு பல்சக்கரைட் ஆகும் B.மோல்டோசு ஒரு இருசக்கரைட் ஆகும்

C.சுக்குரோஸ் ஒரு தாழ்த்தும் வெல்லமாகும் D.செலுலோசு உலகிலேயே மிக ஏராளமாகக் காணப்படும்

E.மோல்டோசு ஒரு தாழ்த்தும் வெல்லமாகும்

22.சுக்குரோஸ் தாவரங்களில் பொதுவாகக் காணப்படும் இருசக்கரைட் ஆகும்.இதன் இரண்டு ஒருசக்கரைட்டுக்களும்

1.Fructose,Fructose 2.Glucose,Fructose 3.Fructose,Galactose

4.Glucose,Galactose 5.Glucose,Glucose

23.பின்வரும் பதார்த்தங்களுள் கபோவைதறேட் அல்லாதது எது?

1.செலுலோஸ் 2.இலிக்னின் 3.இறைபோசு 4.இலக்ரோசு 5.எமைலோசு

24.பின்வருவனவற்றுள் எதன் கூறாக எப்போதும் பொஸ்பரசு காணப்படும்

1.கொழுப்பு 2.எண்ணெய் 3.புரதம் 4.காபோவைதறேட் 5.நியூக்கிளிக்கமிலம

25.DNA தொடர்பாகத் தவறானது

1.ஒரு கலத்தினால் தோற்றுவிக்கப்படும் நொதியத்தின் கட்டமைப்பை அக்கலத்தின் DNA நிர்ணயிக்கும்

2.ஒரு DNA மூலக்கூறின் இரு பட்டிகைகளும் சர்வசமனானவை

3.DNA இலுள்ள மூலங்களின் தொடர்பைப் பொறுத்தே பரம்பரையலகுகள் ஒன்றுக்கொன்று வேறுபடும்

4.விகாரத்தின் போது DNA இன் கட்டமைப்பு மாறும்

5.இழையுருப்பிரிவுக்கு முன்னர் DNA இன் அளவு பகர்ப்படையும

MR.SUGU